பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 17 செவ்வாய்க்கிழமை 03.09.2024 கதிர் 300

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியிலிருந்து அதன்தலைவர்மாவைசேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் நாடாளுமன்ற ☞ 2

# பிரிவினைவாத சவாலை தோற்கடித்து ஒற்றையாட்சியை பேணிக் காப்போம்

## தேர்தல் அறிக்கையில் நாமல் உறுதிமொழி



இன்றும் பிரிவினைவாத அரசியல் செயற்பாடுகள் பல்வேறு வடிவங்களில் நாட்டுக்குச் சவால்விடுகின்றன. அந்தச் சவால்களை தோற்கடித்து நாட்டின்ஒற்றையாட்சியைபேணி பாதுகாப்பது எமது பிரதான கொள்கையாகும் என்று ஸ்ரீ லங்காபொதுஜனபெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தனது தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பொதுஜனபெரமுனவின் ☞ 2

## புதிய அரசியல் கூட்டணி வியாழனன்று தொடக்கம்

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதிய அரசியல் கூட்டணியை வியாழக்கிழமை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

பிரதமர் தினேஷ் குணவர்தன ☞ 8

## மலையக மக்களுக்கு 7 பேர்ச் சொந்த நிலம்

### தோட்டக் கிராமங்களில் வழங்கப்படும் என ரணில் வாக்குறுதி

மலையக மக்களுக்கான தோட்ட கிராமங்களை உருவாக்கி ஒரு குடும்பத்திற்கு ஏழு பேர்சஸ் காணியை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

சனச அமைப்பின் ஊடாக முதியோர்களுக்கான புதிய ஓய்வூதியக் காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று முற்பகல் கொழும்பில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்

## பொருளாதார மத்திய நிலையம் மாங்குளத்தில் அமைக்கப்படும்

### முல்லைத்தீவு கூட்டத்தில் சஜித் வாக்குறுதி

மாங்குளம் பிரதேசத்தில் பொருளாதார அபிவிருத்தி மத்திய நிலையமொன்று உருவாக்கப்படும் என்று உறுதியளித்தார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை 30ஆவது தேர்தல் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில் நேற்று முல்லைத்தீவுநகரில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாற தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சிரேஷ்ட பிரஜைகளின் சேமிப்புக்கு வழங்கப்படுகின்ற 15% வட்டியை தொடர்ந்து வழங்குவதோடு, ஓய்வூதிய கொடுப்பனவையும் சரியாக வழங்க நடவடிக்கை எடுப்போம்.

பாதுகாப்புத்துறையில்உள்ளவர்களுக்கான கொடுப்பனவுகளையும், பதவிஉயர்வுகளையும் சரியான முறையில் வழங்குவோம். பொலிஸாருக்கு தற்போதைய ஆட்சியாளர் ☞ 8



## பொது மன்னிப்பு

ஐக்கிய அரபு அமீரகத்தில் வீசா இன்றி சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்களுக்கு இரண்டு மாத கால பொது மன்னிப்பு வழங்க அந்நாட்டு அரசு தீர்மானித்துள்ளது.

செப்டம்பர் 01 முதல் ஒக்டோபர் 31 வரை இரு மாதம் பொது மன்னிப்பு காலத்தை வழங்க ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஆட்கள், சுங்க மற்றும் துறைமுக பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

தொழில் வழங்குநர்களின் சட்டப்பூர்வ அனுமதியின்றி பணியிடத்தைவிட்டு ☞ 8

## 1745 முறைப்பாடுகள்

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சுமார் 1,745க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது.

ஜூலை 31 முதல் ஒகஸ்ட் 3 வரை கிடைத்தட தேர்தல் முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை 1592 ஆக அதிகரித்துள்ளதாக ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

மொத்தமுறைப்பாடுகளில், 1,526 முறைப்பாடுகள் தேர்தல்சட்ட மீறல்கள் ☞ 8

### மைத்திரிக்கு எதிரான

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கு செப். 27இல் பரிசீலனைக்கு

நீதிமன்றத்தைஅவமதித்ததாகமுன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை பரிசீலிப்பதற்காக செப்டெம்பர் 27 அன்று எடுத்துக்கொள்ளுமாறு உயர் நீதிமன்றம்உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரவர் சசி மகேந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

அப்போது, பிரதிவாதி மைத்திரிபால சிறிசேன ☞ 2

### ஜனாதிபதித் தேர்தலையொட்டி

## ஊடகங்கள் பக்கச் சார்பு ஆணையர் குற்றச்சாட்டு

ஜனாதிபதித் தேர்தலையொட்டி ஊடகங்கள் பக்கச் சார்புடன் செயற்படுகின்றன என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின்தலைவர்ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு ☞ 2

### சம்பளப் பிரச்சினைக்கு தீர்வுக்காணும்

## பரிந்துரையை செயற்படுத்த அமைச்சரவை அனுமதி

அரசஊழியர்களின் சம்பள பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட உதய.ஆர். செனவிரத்ன தலைமையிலான நிபுணத்துவகுழுவின்பரிந்துரைகளை செயற்படுத்தஅமைச்சரவைஅனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி 2025 ஜனவரி 1 ஆம் திகதி முதல் அரச ☞ 8

## தமிழ் அரசு மத்திய செயற்குழுவில் சஜித்திற்கே ஆதரவு அதிகமிருந்தது

### அதனாலேயே அந்த முடிவுக்கு வந்தோம் என்கிறார் சிவிகே

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவில், ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவிற்கு அதிக ஆதரவு இருந்த காரணத்தாலேயே கட்சி அவரை ஆதரிப்பது என்கிற முடிவுக்கு வந்தது என்று அந்தக் கட்சியின் மூத்த துணைத்தலைவரும்வடக்குமாகாண சபையின் அவைத் தலைவருமான சீ.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதென இலங்கை தமிழ் அரசு கட்சி தீர்மானித்தமைமற்றும்இதுதொடர்பில் மாறுபட்ட கருத்துகள் வெளிவருவது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்தியகுழு கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதெனத் தீர்மானம் எடுக்கப்பட்டது. கூட்டத்தில் பங்கேற்றவர்களில் பலர் அந்தத் தீர்மானத்தை ஆதரித்தனர். பொதுவேட்பாளர்ஆதரவுநிலைப்பாட்டைக் கிளிநொச்சி கிளை சார்பில் த.குருகுலராஜா சமர்ப்பித்திருந்தார்.

இதேவேளை, நான் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பதைக் கட்சி தீர்மானிக்காமல் மக்களே தீர்மானிக்கவேண்டும் என்பதை அறிவிப்போம் என்ற கருத்தை முன்வைத்துக் ☞ 8

## தபால் மூல வாக்களிப்புக்கு அனைத்து ஏற்பாடும் பூர்த்தி

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பிற்கான அனைத்துஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாகதேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாளை மாவட்ட தேர்தல் செயலகம், அலுவலகம் மற்றும் பொலிஸ்நிலையங்களில்தபால்மூல வாக்குகளை அளிக்க முடியும் என ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்னாயக்க கூறினார்.

தேர்தல் ஆணைக்குழு, பிரதேச செயலகப் பிரிவுகள் உள்ளிட்ட தேர்தல் பணிகளில் ஈடுபடுவோர் முதல் கட்டமாக வாக்களிக்கவுள்ளனர். அதனை தொடர்ந்து பொலிஸார் உள்ளிட்ட தெரிவு செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்களும் தபால்மூலமாக வாக்களிக்கவுள்ளனர்.

04ஆம், 05 ஆம் மற்றும் 06 ஆம் திகதிகளில் வாக்களிக்க தவறியவர்களுக்கு எதிர்வரும் 11 மற்றும் 12 ஆம் திகதி வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் நேற்றுஅஞ்சல்திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

அதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அஞ்சல் திணைக்களம்,வீடுகளுக்குசென்று விநியோகிக்கும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தமது திணைக்களத்திற்கு கிடைக்கும்உத்தியோகபூர்வ ☞ 8

## இனி இது .....

உறுப்பினர்களான யோகேஸ்வரன், சிறீநேசன் ஆகியோர் கட்சியைவிட்டு வெளியேறுவார்களா? இப்படி நான் கேட்கவில்லை, தமிழ்த் தேசியத்தின் பேரால் தமிழர் ஒற்றுமை, தேச ஒற்றுமை ஆகியவற்றுக்காகப் புறப்பட்ட தமிழ் பொதுக் கட்டமைப்பைச்சேர்ந்தவரும்தமிழ்த்தேசியக் கட்சியைச் சேர்ந்தவருமான சட்டத்தரணி சிறீகாந்தா கேட்டிருக்கிறார்.

2024 ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்று தமிழ் அரசுக் கட்சி முடிவெடுத்திருக்கிறது என்று அறிவிக்கப்பட்டபின்னர்சிறீகாந்தாவிற்குஇந்தச் சந்தேகம் வந்துள்ளது. அவரது கேள்வியின் அர்த்தம் என்னவென்றால், தமிழ் அரசுக் கட்சிக்குள் தமிழ்த் தேசியம் பேசும் இவர்கள், உண்மையான தேசியவாதிகளா இருந்தால் இனி தமிழ் அரசுக் கட்சியில் இருக்கக்கூடாது, தமிழ்தேசியப்பொதுக்கட்டமைப்பின்பக்கமே அவர்கள் தாவவேண்டும் என்பதுதான். ஆகமொத்தத்தில் ஒற்றுமைக்கு என்று புறப்பட்டவர்கள் இப்போது பிரித்தாள்வதில் நிபுணத்துவம் கொண்டு அலைகிறார்கள்.

தமிழ் அரசுக் கட்சியை அழுத்தங்கள் மூலம்தங்கள்காலடியில்கொண்டுவரமுடியும் என்று மார்தட்டியவர்கள் இப்போது அந்தக் கட்சியிலிருந்து நாலைந்து பேரையாவது பிரித்து எடுத்துவிட முடியாதா என்று அங்கலாய்ப்பதையும் தலையால் கிடங்குகிண்டுவதையும் பார்க்கும்போது பரிதாபமாகவும் இருக்கிறது. சிரிப்புச் சிரிப்பாகவும்வருகின்றது. நடிகர்வடிவேலுவின் நகைச்சுவைக் காட்சியான ''பேஸ்மன்ட் வீக்கு; பாடி ஸ்டார்ங்கு'' என்பதுதான் ஞாபகத்திற்கு வருகின்றது. தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு தமிழ் மக்களின் ஆதரவு கிடைத்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் தமிழ் அரசுக் கட்சி இப்படி சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு என்று அறிவித்தது என்றும் புலம்புகின்றார் சிறீகாந்தா. ஆக மொத்தத்தில் தமிழ் அரசுக் கட்சிநினைத்தால்தமிழ்பொதுவேட்பாளருக்கு வாக்குகள் கிடைக்காது என்பதை அவரும் ஏற்றுக்கொள்கிறார்.

தமிழ் அரசுக் கட்சி இல்லாமல் தங்கள் இலக்கை அடைய முடியாதோ என்பதில் சந்தேகம், அதேநேரம் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தமிழ் அரசுக் கட்சியைச் சின்னாபின்னப்படுத்தி அழித்து ஒழித்துவிடும் வன்மம்எல்லாவற்றையும்கொண்டிருந்தாலும் வாக்குகளுக்காக ஒற்றுமை என்றபடி புன்னகைக்கநமது அரசியல்வாதிகளால்தான் முடிகிறது. வாழ்க தமிழ் அரசியல்!

........................

தமிழ் அரசுக்கட்சியின் மத்திய செயற்குழு எடுத்த முடிவு கட்சியின் முடிவல்ல என்று கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்என்றுநேற்றுஉலாவியஉருட்டின் தொடக்கப்புள்ளி இன்னமும் புலப்படவில்லை. இந்தச் செய்தியை கொழும்பில் இருந்து வெளியாகும் டெய்லிமிரர் ஆங்கிலப் பத்திரிகையும்கூடவெளியிட்டிருந்தது. ஆனால், அதில்கூட அந்தத் தகவலை மாவையர் டெய்லி மிரருக்குத் தெரிவித்தார் என்று கூறப்படவில்லை. பத்திரிகை ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவின்உறவினருடையது. அதனால் சஜித்தை ஆதரிக்கும் முடிவு கட்சியின் முடிவல்ல என்ற கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், எந்த ஊடகத்திற்கு எப்போது மாவையர் அதைச் சொன்னார் என்பதுதான் இன்னும் பிடிபடவே மாட்டேன் என்கிறது.

சரி அது போகட்டும், மாவையரின் உருட்டு என்று ஞாயிற்றுக்கிழமை இரவு முழுவதும் உருட்டப்பட்ட விடயத்திற்கு முற்றிலும் மாறாக நேற்றுக் காலையில் மாவையரின் கருத்து அமைந்திருந்தது. மத்திய குழுவின் முடிவை எப்படிச் செயற்படுத்துவது என்று அடுத்தடுத்த கூட்டங்களில் ஆராய்வோம் என்று செய்தியாளர்களிடம் கூறி தன்குறித்த சர்ச்சைக்கு அவர் முற்றுப்புள்ளி வைத்தார். தமிழ் அரசுக் கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கத்தின் நினைவு நிகழ்வில் பங்கேற்றுவிட்டுத் திரும்பும்போது அவர் இதனைத் தெரிவித்தார். இதனால், தமிழ் அரசுக் கட்சிக்குள் பிளவு என்று தெரிவித்து அரசியல் செய்யலாம் என்று நினைத்தவர்களின் வாயில்தான் மண் விழுந்துவிட்டது.

தலைவராகத் தான் இருக்கையில் தன்னைவிட்டுவிட்டு கட்சி ஒரு முக்கிய முடிவை எடுத்துவிட்டமை குறித்து ஞாயிற்றுக்கிழமை மாலையில் அவர் வருத்தத்தில்இருந்தார்என்பதுஉண்மைதான். அதனால் சில வார்த்தைகள் வந்து விழுந்தன என்பதும் உண்மைதான். அதற்காக அவர் கட்சியைவிட்டுக் கொடுத்துவிட்டு ஓடிவிடுவார் என்று மற்றவர்கள் எதிர்பார்த்தால் அது முட்டாள் தனமானது. அவரைத் தலைமைப் பதவியில் இருந்து அகற்றிவிட்டு மற்றொரு தலைவரைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் இருந்தே இதுபோன்ற புறக்கணிப்புக்களை அவர் எதிர்கொண்டுதான் வருகின்றார். எனவே இது அவருக்குப் புதியதொன்றுஅல்ல. இதற்காகவெல்லாம்அவர் கட்சியைவிட்டு வேறுபக்கம் தாவிவிடுவார் என்பது நடக்கக்கூடிய காரியமல்ல. மற்றைவர்களைப் பற்றிச் சொல்ல முடியாது. ஏனெனில் சும்மா இருந்த அரியத்தாரையும் உசுப்பிவிட்டு சங்குச்சின்னத்தையும் கையில் வாங்கிக்கொடுத்தவர்கள், அதற்காகவாது ஏதாவது செய்தாகத்தானே வேண்டும்.

தற்போது லண்டனில் உள்ள சிறீதரன் எம்.பியிடமும் ஒருவர், சஜித்தை ஆதரிக்கும் முடிவை எடுத்த பின்னர் தமிழ் அரசுக் கட்சியைவிட்டு நீங்கள் விலகவேண்டும் என்று தெரிவித்த கருத்துக்குப் பதலளிக்க விரும்பவில்லை என்று படக்கென்று முறித்துக்கொண்டார். எனவே சிறீகாந்தாவும் பொதுக் கட்டமைப்பினரும் எதிர்பார்ப்பதைப் போன்று தமிழ் அரசுக் கட்சியிலிருந்து அவர்கள் பக்கத்திற்கு தாவுவதற்கு ஆட்கள் இருக்கிறார்களா என்பது தேடிப் பிடிக்க வேண்டிய விடயம்தான்.

.............

தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பினால் தேர்தலில் நிறுத்தப்பட்டுள்ள தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் அறிக்கை இன்று அனேகமாகயாழ்ப்பாணத்தில்வெளியிடப்படும் என்று தெரிகிறது.

பொது வேட்பாளர் மன்னார் மாவட்டத்தில் பரப்புரைப் பணிகளில் இருக்கையில் யாழ்ப்பாணத்தில்வைத்து இந்த அறிக்கையை வெளியிட இருக்கிறது.

பொது வேட்பாளருக்கு ஆதரவான முதலாவதுபரப்புரைக்கூட்டம்முல்லைத்தீவில் இடம்பெற்றபோது மாவட்டத்திற்கு இரு பொதுக் கூட்டம் போடப்பட்டு பரப்புரை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அதன்படி 8 மாவட்டங்களிலும் 16 கூட்டங்கள் நடத்தப்பவேண்டும். தேர்தல் வாக்களிப்புக்கு இன்னும் 18 நாள்களே எஞ்சியிருக்கும் நிலையில் நாளுக்கொ-ரு கூட்டமாவது போட்டால்தான்அந்தஇலக்கைஅடையமுடியும். ஆனால் இதற்கான ஏற்பாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஒ-ருவேளை கூட்டம் போட்டு அதற்கு ஆட்கள் வரவில்லை என்றால் பொது வேட்பாளருக்கு ஆதரவில்லை என்ற கருத்து ஆணித்தரமாக வெளிப்பட்டுவிடுமோ என்று அஞ்சுகிறார்களோஎன்னவோதெரியவில்லை. தேர்தல் அறிக்கைக்-குப் பின்னராவது பொதுக் கூட்டங்களை நடத்துகிறார்களா என்று பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பிரிவினைவாத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் அறிக்கை வெளியிடல் நிகழ்வு நேற்று கொழும்பில் உள்ள ரட்னதீப நட்சத்திர சொகுசு விடுதியில் இடம்பெற்றது. முன்னாள் ஜனாதிபதிகளானமஹிந்தராஜபக்ச, கோட்டபய ராஜபக்ச மற்றும் பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ச, பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ச உட்பட பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

காலை 10.30 மணிக்கு சர்வமத வழிபாடுகளுடன் நிகழ்வு ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தனது கொள்கை திட்டத்தை சர்வமததலைவர்களுக்குகையளித்தார். அவரது தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான விடயங்கள் வருமாறு:

நாட்டின் பொருளாதார செயற்பாடுகள் பிரதானமாக சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைகளுக்கமைய முன்னெடுக் கப்படுகின்றன. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு சாதகமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும் அவை சிறந்த மற்றும் நிலையான தீர்வல்ல, அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட நிர்வாகம் சிறந்ததாக காணப்பட்டாலும் அதிக வரிச்சுமையினால் சாதாரனமக்கள்பொருளாதாரநெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பலமான ஆட்சியின் கீழ் நிலையான பொருளாதார திட்டமிடலுடன் மக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரிச் சுமைகளை குறைப்பதற்கான நடவடிக்கைகளுக்கு சர்வதேச நாணய நிதியத்துடன் செயற்பட வேண்டும்.

அரசின வரவு செலவுத் திட்ட இலக்கை வெற்றிக் கொள்வதுடன், நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கி நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை துரிதமாக செயற்படுத்துவோம்.

### பட்டினியை ஒழிக்கும் செயற்திட்டம்

சகலமனிதர்களுக்கும்உணவுஅத்தியாவசியமானது. அனைத்து அபிவிருத்திகளுக்கும் முன்னர் இந்த அத்தியாவசிய தேவையை முழுமைப்படுத்துவது எமது பிரதான இலக்கு. இந்த பூமியில் எவரும் பட்டினியில் இருக்க கூடாது. நாட்டு மக்கள் அனைவரும் மூன்று வேளையும் உணவை பெற்றுக்கொள்வதற்கான பொருளாதார நிவாரணம் வழங்குவது எமது பிரதான கருத்திட்டமாகும்.

### வரி சுமை தளர்த்தல்

அனைத்து மக்கள் மீதும் விதிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர் வரி மற்றும் உழைக்கும்போது செலுத்தும் வரி முறையாக திருத்தம் செய்யப்படும். அதனால் இழக்கப்படும் அரச வருமானத்தை திரட்டிக் கொள்வதற்காக சுங்கம், இறைவரித் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகிய பிரிவுகளில் நிலவும் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு.

பொது மக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரிகளை திருத்தம் செய்து அத்தியாவசிய உணவு பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் குறைக்கப்படும். வரி திருத்தம் ஊடாக மக்களுக்கு கிடைக்கப் பெறும் மேலதிக வருமானத்தை பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

### சமுர்த்தி நிவாரணம் மீண்டும்.

நிலையான வருமானமில்லாத குறைந்த வருமானம் பெறுபவர்கள் மூன்று வேளைகளும் உணவு பெற்றுக்கொள்வதற்கு போதுமான வகையில் நிவாரண நிதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். நீர் மற்றும் மின் கட்டணங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட வகையில் நிவாரணம்.

### உர நிவாரணம்

மஹிந்த சிந்தனை கொள்கைக்கமைய மரகறி மற்றும் பழ உற்பத்திக்காக விவசாயிகளுக்கு நிலையான உர நிவாரண முறைமை அமுல்படுத்தப்படும். அத்துடன் தேயிலை உட்பட ஏனைய பயிர்ச்செய்கைகளுக்குமானிய அடிப்படையில் உரமவழங்கப்படும். அத்துடன் முதல் இரண்டு போகங்களுக்குள் அத்தியாவசிய உணவு பொருட்களின் விலைகள் குறைக்கப்படும்.

### புதிய தொழில்வாய்ப்புக்கள்

சுகாதாரம், கல்வி, கட்டுமாணத்துறை, மென்பொருள் பொறியியலாளர், தரவு ஆய்வாளர், சைபர் பாதுகாப்பு, இலத்திரணியல் வணிகம், நிர்மாணிப்பு உற்பத்தி உள்ளிட்ட துறைகளில் தேசிய மற்றும் சர்வதேசமட்டத்தில் புதியதொழிற்றுறைகள் அறிமுகப்படுத்தப்படும்.

### வெளிநாட்டு முதலீடு ஊக்குவிப்பு

வெளிநாட்டுகையிறுப்பினை அதிகளவில் திரட்டிக் கொள்வதற்காக வெளிநாட்டு முதலீடுகள் ஊக்குவிக்கப்படும். அதற்கமைய 250,000 மில்லியன் டொலருக்கும் அதிகமான முதலீடுகளை கொண்டு வரும் முதலீட்டாளர்களுக்கு விசேட விசா முறைமை அறிமுகப்படுத்தப்படும்.

### சுற்றுலாத்துறை விருத்தி

வெளிநாட்டு கையிருப்பு நெருக்கடிக்கு நிலையானதீர்வுகாண்பதற்குபெருமளவிலான வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை நாட்டுக்கு அழைத்து வர வேண்டும். இதற்கு விசேட சுற்றுலா ஊக்குவிப்பு கருத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

பயன்படுத்தப்படும் குறைந்த வருமான விமான சேவைக்காக கட்டுநாயக்க மற்றும் மத்தளை ஆகிய விமான நிலையங்களில் புதிய வசதிகள் அமுல்படுத்தப்படும்.

### தேசிய அடையாளம்

இலங்கை சுதந்திரமான சுயாதீணமிக்க நாடு. இலங்கையில் ஆட்புல எல்லை மற்றும் அதனுள் உள்ள அனைத்து வளங்களும் நாட்டு மக்களுக்கு சொந்தமானது. அனைத்து இன மக்களுக்கும் அரசியலமைப்பால் வழங்கப்பட்டுள்ள உரிமை மற்றும் நிர்வாகம் வேறுபாடின்றி கிடைக்கப் பெற வேண்டும்.

ஒற்றையாட்சி இராச்சியத்தின் பாதுகாப்பு உறுதி

பிரிவினைவாத பயங்கரவாதத்தை தோற்கடித்து இலங்கையின் ஒற்றையாட்சியை மஹிந்த ராஜபக்ச பாதுகாத்தார். இருப்பினும் இன்றும் பிரிவினைவாத அரசியல் செயற்பாடுகள்பல்வேறுவடிவங்களில்நாட்டுக்கு சவால் விடுக்கின்றன. அந்த சவால்களை தோற்கடித்துநாட்டின்ஒற்றையாட்சியைபேணி பாதுகாப்பது எமது பிரதான கொள்கையாகும். அதற்கான சகல பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செயற்படுத்துவோம்.

### பிளவுபடாத வெளிவிவகார கொள்கை

பொருளாதாரம், சமூக உறவு உள்ளிட்ட சகல துறைகளிலும் பிளவுப்படாத வெளிவிவகாரக் கொள்கையை செயற்படுத்துவோம். நாட்டின் உள்ளக விவகாரங்களில் பிற நாடுகள் மற்றும் அமைப்புக்கள் தலையிடுவதை தடுப்பதற்கு பலமான வெளிவிவகாரக் கொள்கையை செயற்படுத்துவோம்.

### பிரதிநிதித்துவ ஜனநாயக முறைமை பாதுகாப்பு

பிரதிநித்துவ ஜனநாயக முறைமையை பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். தூமதப்படுத்தப்பட்டுள்ளசகலதேர்தல்களையும் ஆட்சிக்கு வந்து ஒருவருட காலத்துக்குள் நடத்துவோம். ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியை பதவிவிலக்க 2022 ஆம் ஆண்டு திட்டமிட்ட வகையில் ஒருதரப்பினரால் அரசியலமைப்புக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இவ்வாறான நிலைமை எதிர்காலத்தில் தோற்றம் பெறாமலிருக்க உரிய நடவடிக்கைகளை எடுப்பதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு உயர்ந்த பட்ச நட்டஈடு வழங்க நடவடிக்கை.

### மொத்த தேசிய உற்பத்தி இலக்கு

எதிர்வரும் 10 ஆண்டுகளில் 180 பில்லியன் டொலர் மொத்த தேசிய உற்பத்தியை அடைவது எமது பிரதான இலக்கு. இதற்கமைய 2035 ஆம் ஆண்டு தனிநபர் மொத்த தேசிய உற்பத்தி 8000 டொலரை அண்மிக்கும்.

### கடன் செலுத்தும் பொருளாதாரம்

இயலுமான வகையில் சகல அரசமுறை கடன்களையும் செலுத்தக்கூடிய வகையில் பொருளாதாரத்தை கட்டியெழுப்பல், அரச கடன் அளவு மொத்த தேசிய உற்பத்தியில் 80 சதவீதமாக குறைத்துக் கொள்ளல் கொள்கையின் பிரதான இலக்காகும்.

அத்துடன் வலுவான வெளிநாட்டு கையிருப்பு, அரச வருமானம் உயர்வு -செலவு கட்டுப்பாடு, தேசிய அனர்த்த மையம், தொழிலின்மைக்கு நிலையான தீர்வு, பணவீக்கம் மற்றும் வட்டி வீதம் ஒற்றை இலக்கத்தில், சமூக அபிவிருத்தி உலகில் 50 நாடுகளுக்குள், கல்வி மறுசீரமைப்பு, உள்ளிட்ட பல துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

## நீதிமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணிமைத்திரிகுணரத்ன, கொழும்புமாவட்டநீதிமன்றம் தனது கட்சிக்காரர் சுதந்திரக் கட்சியின் தலைவராககடமையாற்றுவதற்குஇடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்ததையடுத்து அவர் கட்சியின் பதவியை இராஜினாமா செய்துள்ளதாக நீதிமன்றில் தெரிவித்தார்.

அதன்படி அவர் தொடர்ந்தும் தலைவராக செயற்படவில்லை எனவும் நீதிமன்ற உத்தரவை மீறி அவதூறு செய்யவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

அப்போது, மனுதாரர்சார்பில்ஆஜரானசட்டத்தரணி சாந்த ஜயவர்தன, நீதிமன்றில் கோரிக்கைவிடுத்து, இந்தமனுவின்உண்மைகளை உறுதிப்படுத்தும் திகதியை கோரினார்.

அதன்படி, மனுவை பரிசீலிக்க செப்டெம்பர் 27 அன்று அழைப்பு விடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் சரத் சந்திரவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்ரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுத்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் கடந்த ஏப்ரல் மாதம் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்ததாகவும், இவ்வாறான இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் பின்னர் கட்சியின் தலைவராக மைத்ரிபால சிறிசேன செயற்பட்டுள்ளதாகவும் அதன் மூலம்நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி மைத்திரிபால சிறிசேனவுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## ஊடகங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு சில வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் தேர்தல் சட்டத்துக்கு முரணாகவே செயற்படுகிறார்கள். தமது வேட்பாளருக்கு ஆதரவளிப்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு தேர்தல் சட்டத்தை மீறும் ஆதரவாளர்களின் செயற்பாட்டுக்கு குறித்த வேட்பாளர் பொறுப்புக் கூறவேண்டும்.

தேர்தல்சட்டத்தைமீறும்வேட்பாளர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே தேர்தல் சட்டத்துக்கு அமைய சகல வேட்பாளர்களும் செயற்பட வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறோம்.

ஒருசில ஊடகங்கள் இன்றும் குறிப்பிட்ட ஒருசிலவேட்பாளர்களுக்காகவேசெயற்படுகின்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir



# பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு ரூபா வழங்கினாரா? சிறுபிள்ளைத்தன விமர்சனத்தை தவிர்க்கவேண்டும்

## அநுரவுக்கு இம்ரான் எம்.பி. பதிலடி

(அபு அலா)

சஜித் தொடர்பாக முஸ்லிம்களைத் தொடர்புபடுத்தி அநுரகுமார செய்யும் விமர்சனம் சிறுபிள்ளைத்தனமானது என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.

மூதூரில் இடம்பெற்ற பொதுமக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உை ரயாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் -

அண்மையில் முஸ்லிம் பிரதேசங் களில் இடம்பெற்ற கூட்டங்களில் அநுரகுமார, சஜித் பிரேமதாஸ தொடர்பாக சிறு பிள்ளைத்தனமான விமர்சனங்களை முன்வைத்தார். திகன, மினுவான்கொடை கலவ ரங்களின்போது சஜித் பிரேம தாஸ என்ன செய்தார் என கேட்டிருந்தார்.ஆனால் ஜனாஸா எரிப் பின்போது சஜித் என்ன செய்தார் என்று அவர் கேட்கவில்லை. அவரால் அதை கேட்கவும் முடியாது.

சஜித் அந்த நேரம் என்ன செய்தார், அநுரகுமார அப்போது என்ன செய்துகொண்டிருந்தார் என்று நான் கூறுகிறேன். அச்சம்பவம் இடம்பெற்றபோது சஜித் நாட்டின் ஜனாதிபதியோ, பிரதமரோ எதிர்க்கட்சி தலைவரோ அல்லது உங்களைப் போன்று ஒரு கட்சியின் தலைவரோ அல்லர். அவர் வீடமைப்பு அமைச்சர் மாத்திரமே ஆகும்.

அந்த கலவரங்களில் பாதிக்கப்பட்ட மினுவான்கொடை, குருநாகல் பிரதேச 21 பள்ளிவாயல்களின் புனர்நிர்மாணத்துக்கு சஜித் பிரேமதாஸவே நிதி உதவி செய்திருந்தார். அந்த நிகழ்வுகளில் சஜித் பிரேமதாஸவுடன் நானும் முஜிபுர் ரஹ்மானும் கலந்துகொண்டிருந்தோம். அதன்பின் நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் இது தொடர்பாக நானும் ,முஜிபுர் ரஹ்மான், மரைக்கார் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே குரல் எழுப்பியிருந்தோம்.

தெற்காசியாவின் செல்வந்த காட்சிகளில் ஒன்றான மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரான அநுரகுமார கலவரங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு ரூபா வழங்கி இருப்பாரா? ஜனாஸா எரிப்பின்போது முழு முஸ்லிம் சமூகமும் ஒன்றிணைந்து வீதியில் இறங்கி போராடியது எம்முடன் தமிழ், சிங்கள சகோதரர்கள் இணைந்து போராடினார்கள். அப்போது எங்கே சென்றார் இந்த அநுரகுமார? ஆனால் முஸ்லிம்களோடு அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஒன்றாக இருந்தவர் சஜித் பிரேமதாஸ என்பவர் மட்டுமே.

யாரையும் விமர்சனம் செய்யலாம் ஆனால் அதில் சிறிதளவாவது உண்மை இருக்க வேண்டும். விமர்சனம் செய்ய முன் உங்களையும் சுய விமர்சனம் செய்துவிட்டு விமர்சிக்க வேண்டும். ஆகவே, முஸ்லிம் வாக்குகளை இலக்கு வைத்து பொய்களைக் கூறி முஸ்லிம் இளைஞர்களைத் தூண்டி விடுவதை அநுரகுமார நிறுத்த வேண்டும்.

விமல் வீரவன்ஸ, மக்கள் விடுதலை முன்னணி ஊடாக அரசியலுக்கு வந்து அந்த கட்சி கொள்கையை உடைய ஒருவர். அவ்வாறான கொள்கை உடையவர்கள் அதிகாரத்துக்கு வந்தால் எவ்வாறு செயற்படுவார்கள் என்பதற்கு விமல் வீரவம்ஸவே சிறந்த உதாரணம் எனத் தெரிவித்தார்.(05)

# வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களை தபால் மூலம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை





### 'ஏர் நிலம்' தொண்டமைப்பின் அமுதம் கல்வி செயற்றிட்டம்

'ஏர் நிலம்' தொண்டமைப்பானது கடந்த நான்கு வருடங்களாக 'அமுதம் கல்வித் திட்டம்' என்ற செயற் திட்டத்தை உருவாக்கி நடாத்தி வருகிறது.

இந்த அமைப்பு பொருளாதார நிலையில் பின் தங்கி கல்வி கற்க சிரமப்படும் பெற்றோர்களை இழந்த மாணவர்களுக்கு மாதாந்த கல்வித் தொகையை புலம்பெயர்ந்த உறவுகளின் நிதியுதவியில் வழங்கி அவர்களது கற்றல் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக உள்ளது.

அந்தவகையில்ஞாயிற்றுக்கிழமை





முல்லைத்தீவு மாவட்டம் திருமுறிகண்டி இந்துபுரம் 'பவுல் முன்பள்ளியில்'வருடாந்த ஒன்று கூடல் மிக சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு வணக்கத்திற்குரிய மத குருமாரும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற் றோர்கள் என பலரும்கலந்துகொண்டுசிறப்பித்தனர்.

ஆரம்பநிகழ்வாக மாணவர்களால் மலர் மாலை அணிவித்து அழைத்து வரப்பட்ட விருந்தினர்கள் மங்கல விளக்கேற்றி நிகழ்வை இனிதே தொடங்கி வைத்தனர்.

வரவேற்புரையை ஏர் நிலத்தின் கிளிநொச்சி மாவட்டச்செயலாற்றுனர் திருமதி வதனா ரதீஸ்வரன் சிறப்பாகநிகழ்த்த அதனைத்தொடர்ந்து மத குருமார்களின் ஆசியுரைகள் இடம்பெற்றன.

தலைமை உரையை முல்லை.மாவட்ட செயலாற்றுனர் கவிஞர்முறிகண்டிலக்சிதரன்சிறப்பாக நிகழ்த்தினார்.

தொடர்ந்துஏர்நிலத்தின்களத்திற்கும் புலத்திற்குமானஇணைப்பாளர்கவிஞர் மன்னார் பெனில் இச் செயற்திட்ட விளக்கவுரையினை ஆற்றினார்.

அவர் தனது உரையிலே -

அமுதம் கல்வித்திட்ட மாணவர்களின் கற்றல் செயற்படானது முன்னேற்றகரமாக அமைவதோடு புலம்பெயர் தேசத்திலிருந்து இவர்களுக்கு நிதி அனுசரணை வழங்குகின்றஉறவுகளுக்கும்நெஞ்சார்ந்தநன்றியைக் கூறி அமுதம் கல்வித்திட்டத்தின் ஏனைய செயற்பாடுகள் தொடர்பாகவும் கூறிச் சென்றார்.

அதனைத்தொடர்ந்துகவிச்செம்மல் வன்னியூர் வரன் தனது உரையிலே கல்வியின் மேன்மை பற்றி எடுத்துக் கூறி மாணவர்களுக்கு பல்வேறு கருத்துக்களை வழங்கிச் சென்றார்.

அதனைத்தொடர்ந்து ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர் தேசமான்ய கம்பீரக்குரலோன் சி.நாகேந்திரராசா தனது ஆளுமை மிக்க பேச்சாற்றலால் ஏர்நிலசெயற்பாடுகள் பற்றியும்அமுதம் கல்வித் திட்டம் பற்றியும் பெற்றோர்கள் மாணவர்களைவழிப்படுத்தவேண்டும் என்றும்தனது சிறப்புரையைநிகழ்த்திச் சென்றார்.

அதனைத் தொடர்ந்து ஏர் நிலம் அமைப்பின் ஆலோசகரும் சமாதான நீதிவானுமாகிய ஓய்வுநிலை அதிபர் திருமதி சூரியகுமாரி இராசேந்திரம் கடந்த காலங்களில் கல்வி கற்பதற்கு தாம் பட்ட கஷ்டங்களையும் இப்போது இருக்கின்ற மாணவர்களின் மன நிலையையும்தொட்டுதனதுஉரையை நிகழ்த்தி சென்றார்.

தொடர்ந்து தொலைபேசி வாயிலாக சுவிட்ஸர்லாந்திலிருந்து

ஏர்நிலத்தின்நிறுவுனர் து.திலக்(கிரி)

ஏர்நிலசெயலாற்றுனர்கள்பற்றியும், அமுதம் கல்வித் திட்டம் பற்றியும் தனது ஆழமான கருத்துக்களை பகிர்ந்து சென்றார்.

36 மாணவர்களுக்கு புலம்பெயர் தேசத்தில் இருந்து நிதி வழங்குகின்றவர்களின் விவரங்களையும் அதன் நிதியினூடாக பயன்பெறும் மாணவர்களின் விவரங்களையும் அரங்கிலே வெளிப்படுத்தி புலம்பெயர் தேசத்தில்இருக்கின்றநிதியாளர்களுக்கு மேலும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் ஏர் நில செயலாற்றுனர் யே.லக்சிதரன் பகிர்ந்து கொண்டதோடு மாணவர்களின் கற்றலுக்கான நிதி வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. இறுதியாக மதிய நேரச் சிறப்பு உணவோடு இந்நிகழ்வானது இனிதே நிறைவானது.(05)

# தேசிய மக்கள் சக்தியுடன் கல்வியியலாளர்கள் சந்திப்பு








(பாறுக் ஷிஹான்)

ஜனாதிபதிவேட்பாளர்அநுரகுமாரதிசாநாயக்கவை ஆதரித்து'நாடுஅநுரவோடு' எனும் தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தியின் கொள்கை விளக்க சாய்ந்தமருது பிரதேச கல்வியியலாளர்கள் சந்திப்பு மாளிகைக்காடு தனியார் வரவேற்புமண்டபத்தில்ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தேசியமக்கள்சக்தியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினரும் கல்முனை தொகுதி அமைப்பாளருமான ஆதம்பாவா தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில், தேசிய மக்கள் சக்தியின் விவசாய கொள்கையின் திட்டமிடலுக்கான உபகுழுவின் ஒருங்கிணைப்பாளரும் தேசிய மக்கள் சக்தியின் புத்திஜீவிகள் அமைப்பின் குழுஉறுப்பினருமானஜீ.வி. எச். கோட்டாபய, தேசிய மக்கள்சக்தியின்அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினரும் அம்பாறை நகரசபை முன்னாள் உறுப்பினருமான இந்திக்க விஜயவிக்கிரம ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதன்போது, சாய்ந்தமருது - மாளிகைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த கல்வியியலாளர்கள், தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்கள்உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களின் அமைப் பாளர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வரலாற்று வாய்பை தவற விடுகிறோமா?

**வரலாற்றில் எப்போதும் இல்லாத வகையில் இலங்கையின் அரசுத் தலைவராகுவதற்கு தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளில் வேட்பாளர்கள் தங்கியிருக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. தேர்தல்களத்தில்இருக்கும்பிரதானவேட்பாளர்களான ரணில்விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுரகுமார திஸநாயக்க, நாமல் ராஜபக்ச ஆகியோரில் நாமல் மட்டும் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் புறந்தள்ளி தனிச் சிங்கள வாக்குகளை மட்டும் இலக்குவைத்துச்செயற்பட்டு வருகின்றார். மற்றைய மூவருக்கும் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் மிக மிக அவசியமானவையாக இருக்கின்றன.**

**எந்தவொரு வேட்பாளரும் அறுதிப் பெரும்பான்மையைப்பெறுவதற்குச்சாத்தியங்களைக் கொண்டிராத இந்த அரசுத் தலைவர் தேர்தலில் வெற்றியாளரைத் தீர்மானிக்கக்கூடிய வகையில் ஓரணியாகத் திரண்டிருக்க வேண்டிய தமிழ், முஸ்லிம்வாக்குகள்சிதறியிருக்கின்றமைகண்கூடு. கடந்த சில அரசுத் தலைவர் தேர்தல்களைப் போன்றல்லாமல் இம்முறை இந்த வாக்குகளின் திரட்சி ஒரு வேட்பாளருக்கே செல்வதற்கான அறிகுறிகளைக் காணமுடியவில்லை.**

**முஸ்லிம் மக்களின் வாக்குகள் பெரும்பாலும் சஜித்திற்குச் செல்லும் என்பது தெரிகிறது. அதுபோலவே மலையகத்தமிழர்களின் கணிசமான வாக்குகளும் சஜித்திற்குச் செல்லும். வடக்கு கிழக்கிலும் கணிசமான வாக்குகள் சஜித்திற்குச் செல்லும். அவரை ஆதரிப்பதாக தமிழ் அரசுக் கட்சி அறிவித்திருப்பதைத் தொடர்ந்து தமிழ் மக்கள் கணிசமாக அவருக்கே வாக்களிப்பார்கள் என்பது எதிர்பார்க்கக்கூடியதே. இருந்தாலும் ஆளும் தரப்புப் பக்கம் இருக்கும் தமிழ்க் கட்சிகளின் ஆதரவாளர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கே வாக்களிக்கப் போகிறார்கள். மலையகத்தில் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்களும் வடக்கு கிழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர்கள்பிள்ளையான் மற்றும்வியாழேந்திரன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் ஆதரவு வாக்குகளும் கிடைக்கும். அனுரவுக்கு குறிப்பிடத்தக்களவு வாக்குகள் கிடைப்பதற்கான சாத்தியங்கள் இல்லை என்றாலும் அவருக்காகவும் தமிழ் மக்களின் ஆதரவைத் திரட்டத் தீவிரம் காட்டி வருகின்றார்கள். தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்கப் போகிறவர்களும் தேர்தலைப் புறக்கணிக்கப் போகிறவர்களும்கூட சிறு தொகை வாக்குகளைப் பிரிப்பார்கள்.**

**இப்படி தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளின் பெறுமதி மிக உச்சத்திற்குச் சென்றிருக்கும் தருணத்தில் அவற்றை முழுமையாக ஒன்று திரட்டி அதனை முழுமையான வீச்சில் பயன்படுத்த முடியாமல் போயிருக்கின்றமை வருத்தத்திற்கும் விசனத்திற்குமுரியது. தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுத் தலைவரை உருவாக்கும் வாய்பை தனக்குள்ளான முரண்பாடுகளின் விளைவாக தவறவிட்டால் அது வரலாற்றில் மறக்கப்படமுடியாத தவறாகப் பதிவாகும். இந்த நிலை இலங்கையில் சிறுபான்மை மக்களின் எதிர்காலத்தையும் எதிர்காலத்தல் கேள்விக்கு உள்ளாக்கும்.**

# மூளுமா மூன்றாம் உலகப் போர்?

**நாகா**

"இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தினால் அது மூன்றாவது உலகப் போருக்கு வித்திடும்!"

ஈரானில் ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனீயே படுகொலை செய்யப்பட்டதற்குப் பிறகு



அந்த நாட்டுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான பதற்றம் உச்சகட்டத்தை அடைந்தபோது பெலாரஸ் அதிபர் அலெக்ஸாண்டர் லுகஷென்கோ, கொலம்பியா அதிபர் கஸ்டாவோ பெட்ரோ முதல் சாதாரண சமூக ஊடகப் பதிவர்கள் வரை விடுத்த எச்சரிக்கை இது.

ஈரானுக்கு ஆதரவாக ரஷியா, சீனா போன்ற சக்திகள்தலைமையிலான ஓர்அணியும்இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா தலைமையிலான நேட்டோ கூட்டணியும் இன்னொரு உலகப் போரைத் தொடங்கலாம் என்பது அவர்களின் கணிப்பு.

மூன்றாம் உலகப் போர் குறித்து பேசப்படுவது இது முதல்முறை அல்ல. ஏற்கெனவே, நேட்டோவின் மிகக் கடுமையான எச்சரிக்கைகளையும் பொருள்படுத்தாமல் உக்ரைன் மீது ரஷியா கடந்த 2022-ஆம் ஆண்டு படையெடுத்தபோதே இந்த அச்சம் வெளிப்படுத்தப்பட்டது.

உக்ரைனுக்காக அணு ஆயுத வல்லமை மிக்க நேட்டோ படைகள் களத்தில் இறங்கும் எனவும் உலகிலேயே மிக அதிக அளவில் பேரழிவு சக்தி படைத்த அணு ஆயுதங்களை வைத்திருக்கும் ரஷியாவுடன் நடைபெறும் அந்தப் போர் உலகப் போராக உருவெடுக்கும் என்றும் கூறப்பட்டது.

அதற்கு முன்னர், சிரியாவில் அந்த நாட்டு அரசுக்கு ஆதரவான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ரஷியாவின் போர் விமானத்தை நேட்டோ உறுப்பு நாடான துருக்கி கடந்த 2014-ஆம் ஆண்டு சுட்டுவீழ்த்தியபோதும்இதேஎச்சரிக்கைஎழுப்பப்பட்டது.

1973 அரபு- இஸ்ரேலிய போர், 1969-ஆம் ஆண்டின் ரஷிய-சீன எல்லைப் பதற்றம், 1962-ஆம் ஆண்டின் கியூபா ஏவுகணைப் பதற்றம் (இத்தாலி, துருக்கி போன்ற நாடுகளில் அமெரிக்கா அணு ஆயுதங்களைநிறுத்திதங்களைச்சுற்றிவளைத்ததற்கு பதிலடியாக, அமெரிக்காவுக்கு நெருக்கமான கியூபாவில் சோவியத் யூனியன் அணு ஆயுத ஏவுகணையை நிறுத்தியதால் ஏற்பட்ட பதற்றம்), இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஜெர்மனியை பாதி பாதியாகப் பிரித்துக் கொண்டிருந்த அமெரிக்க-ரஷிய படையினருக்கு இடையே பெர்லின் நகரில் கடந்த 1961-ஆம் ஆண்டு ஏற்பட்ட பதற்றம், 1950-களின் கொரிய போர்... இப்படி எத்தனையோ நிகழ்வுகளின்போது 'வந்துவிட்டது மூன்றாம் உலகப் போர்' என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

சொல்லப்போனால், இரண்டாம் உலகப் போர் நிறைவடைவதற்கு முன்னரே... பியர்ல்துறைமுகத்தில் ஜப்பான் தாக்குதல் நடத்தி அமெரிக்காவை அந்தப் போருக்கு நேரடியாக இழுத்ததற்கு முன்னரே, '3-ஆம் உலகப் போர் வரப்போகிறது' என்று அமெரிக்காவின் 'டைம்ஸ்' இதழ் 1941-ஆம் ஆண்டில் ஒரு கட்டுரை வெளியிட்டது.

அப்போது ஹிட்லரைப் பகைத்துக் கொண்ட ஜெர்மனி அரசியல்வாதி ஹெர்மான் ராஷ்னிங்குக்கு அமெரிக்கா அடைக்கலம் அளித்தது தொடர்பாக இந்த எச்சரிக்கையை டைம்ஸ் இதழ் விடுத்தது.

இப்படி காலம் காலமாக மூன்றாம் உலகப் போர் குறித்த அச்சம் தெரிவிக்கப்படுவது ஒருபுறம் இருக்க, ஏற்கெனவே சில நிகழ்வுகளை 'இதுதான் மூன்றாம் உலகப் போர்' என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள்.

சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே 1943 முதல் 1991 வரை நடைபெற்ற பனிப் போர், இரட்டை கோபுரத் தாக்குதலுக்குப் பின் உலகம் முழுவதும் அமெரிக்கா நடத்திய பயங்கரவாதத்துக்கு எதிரான போர் போன்றவற்றை மூன்றாம் உலகப் போர் என்று ஒரு தரப்பினர் கூறிவருகின்றனர்.

### எதிரும் புதிருமாகக் குவிந்த படைகள்

உலகப்போர் என்றவரையறைக்குஏற்ப, உலகின் மிகப் பெரிய ராணுவ சக்திகளான அமெரிக்காவும் சோவியத்யூனியனும்மோதிக்கொண்டது, கிட்டத்தட்ட உலகின் எல்லா கண்டங்கள், பெரும்பாலான நாடுகளில் நடைபெற்றது ஆகிய காரணங்களால் பனிப் போரை உலகப் போர் என்று கூறலாம்தான்.

ஆனால், முந்தைய உலகப் போர்களைப் போல் உலக மகா சக்திகள் இந்தப் பனிப் போரில் ஒன்றின் மீது ஒன்றின் படையெடுத்து உதிரம் சிந்தவில்லை. சொல்லப்போனால், அமெரிக்க படையும் ரஷிய படையும்இதுவரை ஒருதுரும்பைகிள்ளியெறிந்துகூட நேரடியாக சண்டை போட்டுக்கொண்டதில்லை.

அதேபோல், ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா என கண்டங்கள் தோறும் பயங்கரவாதத்துக்கு எதிரான போரை அமெரிக்கா நடத்தினாலும், அது இன்னொரு வல்லரசுக்கு எதிரான போராகக் கருத முடியாது. உண்மையில், பனிப் போர் காலத்திலும் ரஷிய செல்வாக்கைக் குறைப்பதற்காக அதற்குப் பிறகும்தாங்களேஉருவாக்கியதீயசக்திகளுடன்தான் பல இடங்களில் அமெரிக்கா போரிட்டது. எனவே, இந்த இரண்டையும் மூன்றாம் உலகப் போர் என்று கூற முடியாது.

அப்படியென்றால், இஸ்ரேலை ஈரான் தாக்கி னாலோ, அல்லது பிற காரணங்களால் மேற்கத்திய நாடுகளுக்கும்சோவியத்-சீன-ஈரான்-வடகொரியகூட்ட ணிக்கும்இடையேபதற்றம்முற்றினாலோ இனிமேல் மிதான் மூன்றாம் உலகப் போர் வருமா என்ற கேள்வி எழலாம். ஆனால், அதற்கான வாய்ப்பு துளியும் கிடையாது என்பதுதான் இந்த விவகாரத்தை நன்கு அறிந்தவர்களின் கருத்தாக உள்ளது.

ஜப்பானில் அமெரிக்கா அணு குண்டுகளை வீசிய பிறகு, அதனால் ஏற்பட்ட பேரழிவு இந்த உலகையை அதிர்ச்சியடைய வைத்தது. ஆனால், இரண்டாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது அந்த அணுகுண்டுகள்தாம்.

இருந்தாலும், மூன்றாம் உலகப் போர் வந்தால் ஜப்பானைப் போல் தாங்கள் வீழ்ந்துவிடக் கூடாது என்பதற்காக வல்லரசுகள் நாகசாகி, ஹிரோஷிமா அணுகுண்டுகளைவிட பல நூறு மடங்கு அழிவை ஏற்படுத்தும் அணுகுண்டுகளைத் தயாரித்து வைத்திருக்கின்றன. அந்தக் குண்டுகளை வைத்திருப்பது எதிரி நாட்டின் மீது பிரயோகித்து அழிப்பதற்காக இல்லை, 'நீ என்னை அழித்தால், நானும் உன்னை நிர்மூலமாக்குவேன்' என்ற பரஸ்பர பேரழிவு உறுதியை (மியூச்சுவல் அஷ்யூர்டு டிஸ்ட்ரக்ஷன்) என்ற உத்திக்காகத்தான்.

இப்படி 'பேச்சு பேச்சாகத்தான் இருக்கவேண்டும், கோட்டைத்தாண்டிவரக்கூடாது' என்றநிலையில்தான் இந்த அணு ஆயுத யுகத்தில் வல்லரசு நாடுகள் இருக்கின்றன. எனவே, ஒரு இஸ்ரேலுக்காக அமெரிக்காவோ, ஈரானுக்காக ரஷியாவோ மூன்றாம் உலகப் போரைத் தொடங்கி, தங்களுக்கு தாங்களே பேரழிவை ஏற்படுத்திக்கொள்ளப்போவதில்லை.

எந்த அணு ஆயுத சக்தி இரண்டாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததோ, அதே அணு ஆயுத சக்திதான் மூன்றாவதாக ஓர் உலகப் போர் தொடங்குவதையும் தடுத்து நிறுத்தும் என்பது ஒரு தரப்பு நிபுணர்களின் கருத்து.

காரணம், முதல் இரண்டு உலகப் போர்களைப் போல் மூன்றாம் உலகப் போர் உலகில் அழிவை ஏற்படுத்தாது; இந்த உலகையே அழித்து விடும்; மனித குலம் மீண்டும் கற்காலத்திலிருந்துதான் பயணத்தைத் தொடங்க வேண்டும் என்று கணிப்புகள் கூறுகின்றன.

மூன்றாம் உலகப் போர் ஆயுதங்கள் குறித்து விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டனிடம் கேட்டதற்கு அவர் கூறிய பதில் இதைத்தான் வெளிப்படுத்துகிறது.

"மூன்றாம் உலகப் போரில் எந்தெந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் என்பது குறித்து தெரியாது. ஆனால், ஒன்று மட்டும் தெரியும். நான்காம் உலகப் போரில் அனைவரும் கல்லையும் தடியையும்தான் பயன்படுத்துவார்கள்."

காலைக்கதிர்
Kalaikkathir

# ஸ்ரீ இராமகிருஸ்ணா அரங்கு அக்கரைப்பற்றில் திறப்பு






(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் வலயத்திலுள்ள அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ணா தேசிய கல்லூரியில் 1983 க.பொ.த.சாதாரண தரம் பயின்ற மாணவர்களின் அமைப்பான, கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி சங்கத்தினரால் அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ணா தேசிய கல்லூரியில் 'ஸ்ரீ இராமகிருஸ்ணா அரங்கு' நேற்று (திங்கட்கிழமை) காலை ஒன்று கூடலின்போது திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் க.ஜயந்தன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அதன் தலைவர் உறுப்பினர்கள் கலந்துகொண்டு திறந்துவைத்தனர்.

அமைப்பின் தலைவர் சுந்தரம் சிவபாலன், செயலாளர் சிவலிங்கம் கனகரெட்ணம், பொருளாளர் சின்னத்தம்பி மணிமாறன் மற்றும் உறுப்பினர்களுக்கு பாடசாலை சார்பில் நன்றி கூறும் நினைவுச்சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

அதன் போது ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.(05)



# முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளின் துறவற தின நூற்றாண்டு விழாத் தொடர் நிகழ்வு





(வி.ரி.சகாதேவராஜா)


சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட நாவிதன்வெளி பிரதேசத்தில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாத் தொடர் நிகழ்வு நடைபெற்று வருகிறது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைகளமும், காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த நற்பணிமன்றமும் இணைந்து நடாத்திய முதல் நிகழ்வு நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி சூரியகுமார் பிரசாந்தினி தலைமையில் இடம் பெற்றது.


இந்நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டதுடன் நாவிதன்வெளி பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு. நீலோந்திரன், திணைக்கள வளவாளர் நா. சனாதனன் ஆகியோர்கலந்துகொண்டதுடன்பாடசாலைகளுக்கான சுவாமியின் திருவுருவப்படங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத் தின் சார்பில் மாவட்ட செயலக இந்து கலாசார உத்தி யோகத்தர் கு. ஜெயராஜி ஏற்பாடுகளை மேற்கொண்டார்.(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்




அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park





கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்




இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# வரலாற்று சிறப்பு மிக்க வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய கொடியேற்றம்



யாழ்ப்பாணம் வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய குரோதி வருட கொடியேற்ற பெருந்திருவிழா, ஆலய பிரதம சிவாச்சாரியார் கண்ணன் குருக்கள் தலைமையில் மற்றும் சிவாச்சாரியார்கள் தலைமையில் நேற்று காலை 9.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில்வடமராட்சியின்பல்வேறுபகுதிகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து சிறப்பித்தனர்

இதேவேளை ஆறாம் திருவிழா வரை காலை மாலை சிறப்பு அபிசேட பூசைகள் இடம் பெற்று 7 ஆம் திருவிழாவான 08 ஆம் திகதி வல்லிபுரத்து ஆழ்வார் வெளிவீதி வரவுள்ளார்.

தொடர்ந்து 8 ஆம் திருவிழாவான 09ஆம் திகதி குருக்கட்டு பிள்ளையார் திருவிழாவும், 9 ஆம் திருவிழாவான 10ஆம் திகதி வெண்ணெய்த் திருவிழாவும், 10 ஆம் திருவிழாவான 11ஆம் திகதி துகில் திருவிழாவும், 11 ஆம் திருவிளாவான 12ஆம் திகதி பாம்புத்திருவிழாவும், 12 ஆம் திருவிழாவான 13ஆம் திகதி கம்சவத திருவிழாவும், 13 ஆம் திருவிழாவான 14ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும், 14 ஆம் திருவிழாவான 15ஆம் திகதி சப்பரத்திருவிழாவும், 15 ஆம் திருவிழாவான 16 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 16 ஆம் திருவிழாவான சமுத்திர திருவிழா 17ஆம் திகதி இடம் பெறவுள்ளதுடன், மறுநாள் 17 ஆம் திருவிழாவாக கேணித்தீர்த்தமும் இடம் பெறவுள்ளன.

திருவிழாவில் கலந்துகொள்ளவுள்ளவர்கள் சைவ சமயமுறைப்படிதிருவிழாவில்கலந்துகொள்ளுமாறும் ஆலய நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் சுகாதார வசதிகளை பருத்தித்துறை பிரதேசசபையும், பாதுகாப்பு ஏற்பாடுகளை பருத்தித்துறைபொலீஸாரும், மேற்கொண்டுள்ளதுடன், போக்குவரத்து ஏனைய வசதிகளும் சம்பந்தப்பட்ட தரப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.(05)

# பெண் கொலைச் சந்தேகநபர் கைது

நன்னேரியா பயிரிக்குளம் பிரதேசத்தில் கடந்த ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் அத்துருகிரியபிரதேசத்தில்வைத்து ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என நன்னேரியா பொலிஸார் தெரிவித்தனர்.

பயிரிக்குளம் பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் கடந்த ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி நன்னேரியா பயிரிக்குளம் பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்குள் புகுந்து சொத்துக்களை திருட முயன்றுள்ளார்.

இதன்போது, இந்த வீட்டின் பெண் உரிமையாளர் திடீரென வீட்டிற்குள் சென்றுள்ளார். இதனையடுத்து, சந்தேக நபர் இந்த வீட்டின் பெண் உரிமையாளரை கொலைசெய்துவிட்டுஅங்கிருந்துதப்பிச்சென்றுள்ளார்.

62 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நன்னேரியாபொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர். (05)



# அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்படும்

ஜனாதிபதியைச்சந்தித்தமுன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இராஜேஸ்வரன் நம்பிக்கை

(வி.ரி. சகாதேவராஜா)

கடந்த பல்லாண்டு காலமாக அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எதிர்நோக்கிவரும் இன்னோரன்ன பிரச்சினைகள் ஜனாதிபதி ரணில் காலத்தில் தீர்த்து வைக்கப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்துப் பேசியதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபையின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் நம்பிக்கை தெரிவித்தார்.


எதிர்வருகின்ற ஜனாதிபதி தேர்தலில் எனது பூரண ஆதரவை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு வழங்குவதாக முடிவெடுத்துள்ளேன் என்றும் அவர் கூறினார்.

இவர் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் கொழும்பு சென்று சந்தித்து இருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் படும் துன்பங்கள் கொஞ்சநஞ்சம் அல்ல தொடர்ச்சியாக எமது மக்களை ஏமாற்றிக்கொண்டு ஒரு சில அரசியல்வாதிகள் தங்களுடைய சுயலாபங்களை அடைந்தவையே மிச்சம். எல்லா மாவட்டங்களிலும் ஒப்பிடும்பொழுது அம்பாறை மாவட்ட தமிழ்ப்பிரதேசங்கள் அனைத்தும் பின் தங்கியே காணப்படுகின்றன. எதிர்காலத்தில்அம்பாறைமாவட்டதமிழ் மக்களை அங்கு வசிக்கின்ற மக்களே ஆள வேண்டும் அவர்களுக்கான சகல விதமான முடிவுகளையும் அவர்களேஎடுக்க வேண்டும்எதிர்கால சிந்தனை(எதிர்வர இருக்கின்ற தேர்தல்கள்) அவ்வாறு இருந்தால் மாத்திரமே இளைஞர்களின் தொழில் வாய்ப்புகளும் சரி அபிவிருத்தியிலும் சரி கொள்கையிலும் சரி எந்தவிதமான குறுக்கீடுகளும் இல்லாமல் சிறந்த முடிவுகள் எட்டப்படும்.

ஆகவே இவற்றைக் கருத்தில் கொண்டு நமது மக்களுக்கான வாய்ப்பாக நடைபெறுகின்ற ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்துவதை எதிர்பார்க்கின்றேன். - என்றார்.(05)




# நுவரெலியாவில் பிறப்புச் சான்றிதழுக்கு பதிலாக இறப்பு சான்றிதழ் விண்ணப்பப்படிவம் வழங்கல்

## மக்கள் கடும் விசனம்

நுவரெலியா பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பிறப்பு சான்றிதழ் பத்திரம் பெறுவதற்காக செல்லும் பொதுமக்களுக்கு இறப்பு சான்றிதழ் பெறுவதற்காக வழங்கப்படும் விண்ணப்ப படிவத்தை நிரப்ப வேண்டிய சூழ்நிலை தற்போது உருவாக்கி உள்ளது.

இந்நடவடிக்கையால்மக்கள்பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளது என பொதுமக்கள் விஷனம் தெரிவிக்கின்றனர்.

இந்நடவடிக்கையானது ஒரு மாதத்திற்கும்மேலதிகமாகநடைபெற்று வருகிறது. குறித்த விடயத்தின் போது நுவரெலியா பிரதேச அலுவலகத்தில் வழங்கப்பட்ட பிறப்பு சான்றிதழ் விண்ணப்ப படிவத்தில் இறப்பு என குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் சிங்கள மொழியில் இறப்பு என குறிப்பிடப்பட்ட சொல்லை வெட்டி விட்டு அதற்கு பதிலாக ஆங்கில மொழியில் பேத் என எழுதப்பட்டு காணப்படுகிறது. இதனால் தமிழ் மொழி மாத்திரம் தெரிந்தவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இது சம்பந்தமாக பொறுப்பு கூற வேண்டிய அதிகாரியிடம் வினவிய போது இவ்வாறான நடவடிக்கை கடந்த ஒரு மாதத்திற்கு மேலதிகமாக நடைபெறுவதாக தெரிவித்தார்.

(05)

# எங்களை அழித்தொழிப்பதற்கு சிங்களவர்கள் தேவையில்லை

## எங்களது தலைவர்களே போதும் என அன்னராசா சீற்றம்



தமிழரசு கட்சி ஞாயிற்றுக்கிழமை கூடி வவுனியாவில் முடிவு எடுத்ததன் அடிப்படையில், தமிழரசு கட்சியானது ஒற்றுமை இல்லாமல் தமிழர்களை பிரிவுக்கும் அல்லது தமிழர் இந்த நிலைக்கு போவதற்கும் காரணமாக இருக்கின்றது என வடக்கு வடக்கு மாகாண மீனவ அமைப்பின் பிரதிநிதியான அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நிறைவேற்றப்பட்ட தமிழரசு கட்சியின் தீர்மானம் குறித்து, சமூகமட்ட பொது அமைப்பின் பிரதிநிதி என்ற வகையில் அவரிடம் இதுகுறித்து கருத்து வினவியபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

2009ஆம்ஆண்டுக்குபிற்பாடுஇன்றுவரைக்கும் தமிழரசுக்கட்சிதமிழருடையஉரிமைகளைமீட்பதற்கு உளரீதியாக செயல்படவில்லை. வாய் ரீதியாக மக்களுக்கு ஒன்றை சொல்வதும் அரசாங்கத்திற்கு ஒன்றை சொல்வதுமாக இருக்கின்றது.

ஒட்டுமொத்த கட்சியாக இந்த முடிவை எடுத்திருந்தால் நாங்கள் வரவேற்றிருப்போம். ஆனால் கட்சியின் தலைவர் ஒன்றைக் கூறுகின்றார், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா ஒன்றைக் கூறுகின்றார், பல உறுப்பினர்கள் இதில் கலந்துகொள்ளவில்லை. ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் தமிழ் மக்களின் ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் குலைப்பதற்கான அடித்தளமாகத்தான் நாங்கள் இதனை பார்க்கின்றோம்.

தமிழரசு கட்சியை எடுத்து பார்ப்போமேயானால் சிவஞானம் சிறீதரன், குகதாசன் ஆகியோர் உட்பட்ட கிளிநொச்சி மற்றும் திருகோணமலை கிளைகளால் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் அதனை எதிர்க்கின்றனர். இவ்வாறு இருந்தால் தமிழர்களுடைய நிலை என்ன?

தமிழர்களைக் கூறு போட்டு, தமிழர்களுடைய இருப்புகளை அழிப்பதற்கு ரணிலோ, சஜித்தோ, அனுரவோ அல்லது நாமல் ராஜபக்ஷவோ தேவை யில்லை, எமது கட்சித் தலைவர்களே போதும்.

தமிழ் சிவில் சமூகமாக நாங்கள் எடுத்த பொது வேட்பாளர் என்ற முயற்சியை ஆதரித்து, எதிர்காலத்தில் இவ்வாறான புல்லுருவிகளையும், முண்டு கொடுப்பவர்களையும் நிராகரிப்பதற்கு நாங்கள் தமிழர் சமூகமாக ஒன்றுபட வேண்டும்.

வாக்குப்போடுவது மக்களாகிய நாங்கள். ஆனால் இவர்கள் எப்போது மக்களை சந்தித்து, மக்களது கருத்துக்களை கேட்டு தீர்மானம் எடுத்தார்கள்? ஆகவே இவர்கள் மக்களது பிரதிநிதிகள் என்று கூறி எவ்வாறு சர்வதேச சமூகங்களிடம் பேசப் போகின்றார்கள்?

வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் கூட்டம் பிரிவினையைக் காட்டுகின்றது. எனவே, மக்களே நீங்கள் இந்த தமிழரசுக் கட்சியை நம்பாதீர்கள். நாங்கள் சுயமாக சிந்தித்து, எங்களுக்கு இருக்கின்ற வாக்குரிமை பலத்தால் ஒன்றிணைந்து செயற்படுவோம். எமது கட்டமைப்புக்குள் வருமாறு நாங்கள் இலங்கை தமிழரசுக் கட்சியையும் அழைக்கின்றோம்.

தங்களுடைய சுயலாபத்துக்காகவும், தங்களது மதுபான நிலைய அனுமதிப் பத்திரத்துக்காகவும், தாங்கள் கோடிகளை சம்பாதிப்பதற்காகவும் தமிழ்மக்களை எதிர்காலத்தில் விற்றுப் பிழைப்பது சாத்தியமற்றது. 21ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் அது வெளிச்சத்துக்கு வரும். அப்பொழுது இந்த அரசியல் காட்சிகளும், பேரம் பேசுபவர்களும் புரிந்துகொள்வார்கள்.

எனவேதான் நாங்கள் கூறுகின்றோம். இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு சங்கு சின்னத்திற்கு வாக்களிப்போம், எமது ஒற்றுமை நிலைநாட்டுவோம் அதுவே எமக்கான தீர்வு என அவர் மேலும் தெரிவித்தார்.(05)

## ஊடகங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றன. ஊடகங்களில் வேட்பாளர்களுக்கு வழங்கப் படும் காலவகாசம் குறித்து அரச தகவல் திணைக்களம் அன்றாடம் எமக்கு அறிக்கை சமர்ப்பிக்கிறது. அதில் ஒருசில இலத்திரனியல் ஊடகங்கள் பக்கச்சார்பாகச் செயற்படுகின்றன என்பது தெரிகிறது.

ஒருசில அச்சு ஊடகங்களும் குறிப்பிட்ட ஒருசில வேட்பாளர்களுக்கு சார்பாக செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. இயலுமானவரை சகல வேட்பாளர்களுக்கும் முன்னுரிமை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். எமது அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்காத ஊடக நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

## 1745 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பானதெனவும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 58 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.1745 முறைப்பாடுகள்

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சுமார் 1,745 க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது.

ஜூலை 31 முதல் ஒகஸ்ட் 3 வரை கிடைத்த தேர்தல் முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை 1592 ஆக அதிகரித்துள்ளதாக ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

மொத்த முறைப்பாடுகளில், 1,526 முறைப்பாடுகள் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பானதெனவும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 58 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## பொருளாதார ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களால் வழங்கப்படுகின்ற 3 மாதத்துக்கான மேலதிக கொடுப்பனவை தொடர்ந்தும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

கல்வித்துறையும் சுகாதாரத்துறையும் விரிவுபடுத்துவதோடு எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு பிரபஞ்சம், மூச்சு போன்ற செயற்றிட்டங்களின் ஊடாக ஒரு பில்லியன் பெறுமதியான சேவைகளை கல்விக்கும் சுகாதாரத்துக்கும் செய்திருக்கிறோம்.

நான் சொல்வதைச் செய்கின்ற, செய்வதைச் சொல்கின்ற நபர் என்ற அடிப்படையில் தேர்தல் அறிக்கையில் உள்ள அனைத்து விடயங்களையும் இந்த மண்ணின் நிதர்சனமாக உண்மைப்படுத்துவேன்.

பெண் தலைமைத்துவம் உள்ள குடும்பங்களுக்கு விசேட வாழ்வாதார செயற்றிட்டத்தைத் தொடங்குவோம். அங்கவீனர்களுக்காக விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு, அதன் ஊடாக அவர்களை பொருளாதாரத்தின் பங்காளர்களாக இணைத்துக்கொள்வதற்கான பெரும் செயற்றிட்டத்தையும் முன்னெடுப்போம்.

கோட்டாபய, ரணில் விக்ரமசிங்க ஆகிய ஜனாதிபதிகளுடைய காலத்தில் நிறுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதோடு, காணி இல்லாதவர்களுக்கும், வீடு இல்லாதவர்களுக்கும் கம் உதாவ யுகத்தை மீண்டும் உருவாக்கி தீர்வு பெற்றுத் தருவோம்.

அத்தோடு நாட்டின் பல பகுதிகளில் காணிப்பிரச்சினை காணப்படுகின்றது. காணி இல்லாதவர்களும், காணி கிடைக்கப் பெறாதவர்களும், காணி இருந்தும் உறுதிப் பத்திரம் இல்லாதவர்களும் இருக்கின்றார்கள். இதற்காக ஜனாதிபதி செயலணி ஒன்றை தாபித்து, அதன் ஊடாக காணி இருந்தும் உறுதிப்பத்திரம் இல்லாதவர்களுக்கு உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

இந்தமுறை ஜனாதிபதி தேர்தலில் நாட்டை கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை ஜனாதிபதி உட்பட அனைவரும் முன்வைத்திருக்கிறார்கள். திட்டங்களை முன்வைப்பதற்குப் பதிலாக சேவைகளைச் செய்வதையே ஜனாதிபதி செய்ய வேண்டும். இந்தப் பதில் ஜனாதிபதி அவருடைய பதவிக் காலத்தில் எந்த ஒரு தொழிற்சாலையும் உருவாக்கவில்லை. அதிகாரத்தை கோருகின்ற மாற்று நபர்களும் தொழிற்சாலைகளை உருவாக்குவதைவிட அவற்றைத் தீயிட்டு கொளுத்துவதையே வழக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின் ஊடாக வடகிழக்கு மாகாணங்களை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற, சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டின் ஊடாக இந்த செயற்றிட்டங்களுக்கு அதிகளவான உதவிகளை பெற்றுக்கொண்டு, பெருந்தொகையான வெளிநாட்டு உதவியைப் பெற்றுக்கொண்ட யுகமாக இந்த யுகத்தை மாற்றுவோம். அதனூடாக நாட்டுக்கு அபிவிருத்தியை கொண்டு வருவோம்.

மீன்பிடித் தொழிற்துறையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். துறைமுகங்கள் நங்கூரமிடக்கூடிய நிலப்பிரதேசங்கள் என்பனவற்றை சர்வதேச நிவாரணங்களை மையப்படுத்தி விருத்தியடையச் செய்வதோடு, மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தவும் நடவடிக்கை எடுப்போம். அத்தோடு ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தித் துறையின் ஊடாக மீன்பிடித் தொழிலை உயர்ந்த மட்டத்துக்கு அபிவிருத்தி அடையச் செய்யவும் நடவடிக்கை எடுப்போம்.

சூரிய சக்தி மற்றும் நிலையான எரிசக்தி கட்டமைப்பை ஏற்படுத்தி, ஸ்தீரமான எரிசக்தி கட்டமைப்புக்கு முன்னுரிமை வழங்கி, தொழில் வாய்ப்புகளை உருவாக்க முடியும். அதற்காக மாங்குளம் பிரதேசத்தில் பொருளாதார அபிவிருத்தி மத்திய நிலையமொன்றை உருவாக்கி, அதனூடாக வீட்டுப் பொருளாதாரத்தையும் முன்னேற்ற முடியும். வேலை வாய்ப்பு இல்லாத இளைஞர் யுவதிகளுக்காக தொழிற்சாலைகளை உருவாக்குவதோடு, அதனூடாக நேரடியாக வெளிநாட்டு முதலீட்டையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

விவசாயத்தையும் சுற்றுலாத்துறையையும் மேம்படுத்த வேண்டும். வனவிலங்கு பிரதேசங்களை வளமாக மாற்றி, வன ஜீவராசிகளை மையமாகக் கொண்ட சுற்றுலாத் துறைக்கான புதிய செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்தி, சுற்றுலாத்துறை மேம்படுவதற்கு, சுற்றுலா நகரங்களை உருவாக்குவோம்.

ஊழலுக்கு எதிரான செயற்றிட்டங்களை சரியான முறையில் நிறைவேற்றி, நாட்டில் இருந்து திருடப்பட்ட அனைத்து சொத்துக்கள், பணம் என்பன மீண்டும் நாட்டுக்கு கொண்டுவரப்படும். நாட்டுக்கான வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## சட்டவிரோத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

1977 இல் பதவியேற்ற ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி இந்த நாட்டின் பொருளாதாரத்தை திறந்து விட்டது. அதன்படி, புதிய நிறுவனங்கள் மற்றும் புதிய வணிகங்களை உருவாக்க ஒவ்வொரு குழுவும் முன்வந்தன. அன்றைய தினம் சனச இயக்கத்தை ஆரம்பிக்க பி.ஏ.கிரிவந்தெனிய முன்வந்தார். அதன்படி, இந்தத் திட்டத்தை சட்டபூர்வமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் உற்பத்தி மற்றும் விநியோகம் பிரிக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை 1962 இல் டட்லி சேனாநாயக்க மற்றும் ஜே.ஆர்.ஜயவர்தன ஆகியோரால் கொண்டு வரப்பட்டன. உரிமைகளைப் பகிர்ந்தளிப்பதற்கான முன்மொழிவாக இது அரசமைப்பிலும் சேர்க்கப் பட்டுள்ளது. அதன்படி, சனச இயக்கங்கள் போன்ற அமைப்புகள் ஊக்குவிக்கப்பட்டன. இது இலங்கையின் பொருளாதாரத்திற்கும் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது.

20 ஆம் நூற்றாண்டை விட 21 ஆம் நூற்றாண்டில் மாற்றம் ஏற்பட்டது. சிறு தொழில்கள் உருவாகி பொருளாதாரம் விரிவடைந்தது. முச்சக்கரவண்டித் தொழில் மற்றும் சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய சிறு வணிகம் வேகமாக முன்னேறியது. ஆனால் 2022 இல் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, நாடு ஸ்திரமற்ற நிலையில் இருந்த நேரத்தில் நான் நாட்டைப் பொறுப்பேற்றேன். அன்று மக்கள் பொறுமை காக்கவில்லை என்றால் இன்று இந்த நாட்டில் பெரும் அராஜகக நிலை உருவாகியிருக்கும்.

மக்கள் வீதியில் இருந்து கொண்டு நாட்டை நிர்வகிக்க முயன்றால் இன்று பங்களாதேஷுக்கு நேர்ந்த கதி இலங்கைக்கும் ஏற்பட்டிருக்கும். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் கடினமான மற்றும் மக்களுக்கு விருப்பமற்ற முடிவுகளை எடுக்க நேரிட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து இந்நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வாகனம், வீடு, நவீன மின்சாதனங்கள் வாங்குவது மக்களின் கனவாக இருந்தது. நாம் கடினமான காலத்தை கடந்துவிட்டோம். பொருளாதாரம் தற்போது ஸ்தீர நிலையை அடைந்துள்ளதால், மக்களின் கொள்வனவு செய்யும் சக்தியும் அதிகரித்துள்ளது.

மக்களுக்கு காணி உரித்து வழங்கும் வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்நாட்டு மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் முழு உரிமையுள்ள காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, இருபது இலட்சம் காணி உறுதிப்பத்திரங்கள் இதன் மூலம் வழங்கப்படுகின்றன.

கொழும்பு நகர அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு அவர்களின் வீட்டின் உரிமைகளை வழங்கும் திட்டத்தையும் ஆரம்பித்தோம். மலையக மக்களுக்கான தோட்ட கிராமங்களை உருவாக்கி ஒரு குடும்பத்திற்கு ஏழு பேர்சஸ் காணியை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த பொறிமுறையின்படி மக்களுக்கு 'உரிமைகள்' வழங்கும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது.

மேலும், குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு இலகுவட்டியில் வீட்டுக்கடன் வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றின் நிதி, பிணைமுறிப் பத்திரங்களை வாங்க பயன்படுத்தப்பட்டது. இப்போது நாம் முன்னெடுக்கும் வேலைத் திட்டத்தின்படி அரச செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன.

அரச வருமானத்தை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. வருமானம் அதிகரிக்கும் போது, பிணைமுறிப் பத்திரங்களை வாங்க ஊழியர் சேம நிதியத்தின் பணம் தேவையில்லை. அந்த நிதியை முதலீட்டுக்கு பயன்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டு வருகிறது. இது குறித்து தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிகளுடன் கலந்துரையாட எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்காலத்தில் அரச சொத்துக்களிலிருந்து முதலீட்டு நிறுவனம் ஒன்றை நிறுவவும் எதிர்பார்க்கப்படுகிறது. நோர்வே, கட்டார், சிங்கப்பூர் போன்ற நாடுகளும் அரச வருமானத்தின் மூலம் கிடைக்கும் இலாபத்தை நலன்புரிப் பணிகளுக்காகப் பயன்படுத்த இவ்வாறானதொரு நிறுவனத்தை உருவாக்கியுள்ளன. அதன் மூலம் மக்களின் 'உரிமை' பாதுகாக்கப்படும்.

இவ்வாறானதொரு சமூக முதலீட்டுத் திட்டத்தை இந்த சனச இயக்கமும் செய்து வருகின்றது என்பதைக் கூற வேண்டும். இந்த வகையான சமூக முதலீட்டு முறை ல்வேறு சேவை கூட்டுறவு சங்கங்களால் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு புதிய சட்டங்கள் கொண்டு வருவது அவசியமாக உள்ளதுடன், டென்மார்க், ஸ்வீடன் ஆகிய நாடுகளில் நடைமுறையில் உள்ள சட்டங்களைப் ஆராய்ந்து அந்த சட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். இதன் மூலம் முதலீடுகள் அல்லது ஓய்வூதிய திட்டங்களையும் முன்னெடுக்கலாம்.

புதிய டிஜிட்டல் பொருளாதாரத்தில் பிரவேசிக்கும் இளம் தொழில்முனைவோருக்கு ஒரு தனியான சனச இயக்கத்தை உருவாக்க வேண்டும். விவசாயத்துறையையும், மீன்பிடித் துறையையும் நவீனமயமாக்குவதன் மூலம் பொருளாதாரத்தை திறம்பட மேம்படுத்த முடியும். அதற்கெல்லாம் முன்மாதிரியாக சனச கட்டமைப்பு இருந்தது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சனசசங்கங்கள் மழைக்குப் பிடிக்கும் குடையைப் போன்றது. தலைக்கு மேல் உள்ள கூரை போன்றது. இதன் செயற்பாடுகளுக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்க எதிர்பார்க்கிறேன் என்றார்.

## புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையிலான இந்தப் புதிய கூட்டணியின் செயலாளராக அமைச்சர் ரமேஷ் பத்திரன பணியாற்றவுள்ளார்.

இந்நிலையில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் அடுத்த தேர்தலில் போட்டியிட தான் அனுமதிக்கப்படாமை குறித்து முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம கவலை தெரிவித்தார்.

அத்துடன் அவர், தற்போது புதிய கூட்டணி உருவாக்கப்படவுள்ளது. இது புதிய கட்சியை உருவாக்குவதல்ல. அவ்வாறு தவறாக புரிந்து கொள்ளவேண்டாம். இது ஒரு கூட்டணி. இதில் முக்கிய கட்சி ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவே என்பதை புரிந்துகொள்ளவேண்டும். எங்கள் அணியில் மகாஜன எக்சத் பெரமுன. ஈ.பி.டி.பி., தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மற்றும், அசங்க நவரத்ன, அமைச்சர்கள் டிரான் அலஸ், மற்றும் லான்சா ஆகியோர் தலைமையிலான அரசியல் தரப்பினர் ஆகியோர் இணைந்துள்ளனர்.

எம்மைப் பொறுத்தவரையில் பொது ஜனபெரமுனவை விட்டு வெளியேறும் எண்ணம் எங்களுக்கு இல்லை என்றார்.

இதேநேரம், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின பெயரும் கூட்டணியில் உள்ளதா என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமுனுகம, 'அதெல்லாம் ஐந்தாம் திகதி வெளிப்படுத்தப்படும்' என்றார்.

இதேவேளை, மஹிந்த ராஜபக்ச கட்சிக்குத் திரும்ப விரும்புவோருக்கு தனது 'சலூன் கதவு' திறந்திருப்பது குறித்து தெரிவித்த கருத்துக்களுக்கு உரையாற்றிய அமுனுகம, ராஜபக்சவின் இதயம் எமக்காக எப்பொழுதும் திறந்திருக்கும். அவரது இதயம் எம்மை மறுக்கும் வகையில் ஒருபோதும் மூடப்படாது என்பதை நாங்கள் உறுதியாக உணர்ந்துகொண்டுள்ளோம்.

இந்த நேரத்தில் நாம் எடுக்கும் முடிவுகள் நாட்டுக்கு முக்கியமானவை, நாங்கள் அவருக்கு எதிரானவர்கள் அல்லர். அவர் எங்களுடன் இணைந்தே பெரமுன என்ற கட்சியை உருவாக்கினார், நாங்கள் எப்போதும் அவரது ஆதரவாளர்களாக இருக்கிறோம். இந்த புதிய கூட்டணி அரசியல் பரப்பில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை குறிக்கிறது, பல்வேறு கட்சிகளின் முக்கிய பிரமுகர்கள் பெருமுனவின் மீது தங்கள் விசுவாசத்தை தக்கவைத்துக்கொண்டுள்ளதோடு பொதுவான காரணத்தின் கீழ் கூட்டணியின் கீழ் ஒன்று பட்டுள்ளனர் என்றார்.

## பொது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறுபவர்கள் மற்றும் செல்லுபடியாகும் விசா இல்லாதவர்கள் இந்த பொது மன்னிப்புக் காலத்தில் நாட்டை விட்டு வெளியேறவோ அல்லது உரிய விசா உள்ளிட்ட ஆவணங்களை சட்டப்பூர்வமாக தயாரிக்கவோ அபராதம் செலுத்தாமல் இருப்பதற்கோ வாய்ப்பு கிடைக்கும்.

பொதுமன்னிப்புக் காலப்பகுதியில் அந்நாட்டில் சட்டவிரோதமாக தங்கியுள்ள இலங்கையருக்கு தூதரக சேவைகளை வழங்க விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக டுபாயிலுள்ள இலங்கை தூதரக அலுவலகம் அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது.

அதன்படி, சாதாரண தூதரக சேவைகளுக்கு மேலதிகமாக, டுபாயிலுள்ள இலங்கை துணைத் தூதரகம் திங்கள் முதல் வெள்ளி வரை பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை திறந்திருக்கும்,

அபுதாபியிலுள்ள இலங்கை தூதரகம் ஆலோசனை ஆதரவு சேவைகளுக்காக திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணி முதல் அதிகாலை 5.00 மணி வரை திறந்திருக்கும்.

இப்பொதுமன்னிப்பு காலப்பகுதியில் இலங்கையிலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தற்காலிக பயண ஆவணங்களை இலங்கையிடம் கோருவரென எதிர்பார்க்கப்படுவதாக டுபாயிலுள்ள இலங்கை துணைத்தூதரகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமன்னிப்புக் காலத்தின் போது, ஐக்கிய அரபு இராச்சியத்தில் சட்டவிரோதமாக தங்கியுள்ள இலங்கையர், உரிய வீசாவை சட்டரீதியாக தயார் செய்யுமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அவர்களைக் கோரியுள்ளது. அவர்கள் சட்டவிரோதமாக தங்கியிருந்தால், தமக்கு அறிவிக்குமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## தபால் மூல ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்காளர் அட்டை விநியோகத்தை நாளை முதல் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக பிரதி அஞ்சல் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

## தமிழ் அரசு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடினேன். எனினும் சஜீத்திற்கே கூட்டத்தில் ஆதரவு அதிகம் இருந்ததால் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மாவை சேனாதிராஜா உடல்நலக்குறைவால் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எது எவ்வாறாக இருந்தாலும் நான் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவினது பரப்புரைக் கூட்டத்திற்குச் செல்லப்போவது இல்லை எத்தகைய பரப்புரையயும் மேற்கொள்ள மாட்டேன் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஜெனீவாவிலிருந்து வரும் அச்சுறுத்தலை எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றீர்கள்?

## ஜனாதிபதி வேட்பாளர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென ஜகத் டயஸ் வேண்டுகோள்

ஜெனீவாவின் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் மூலம் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றார்கள் என்பதை ஜனாதிபதி வேட்பாளர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என முன்னாள் இராணுவ அதிகாரி ஜெனரல் ஜகத் டயஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆதாரமற்ற யுத்த குற்றச்சாட்டுகளை அடிப்படையாக வைத்து யுத்தத்தில் வெற்றிபெற்ற இராணுவத்தினரை இலங்கை அரசாங்கம் தண்டிக்கவேண்டும் என அழுத்தம் கொடுக்கும் மனித உரிமை பேரவையை எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றார்கள் என்பது குறித்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது நிலைப்பாடுகளை முன்வைக்கவேண்டு;ம் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவின் சமீபத்தைய அறிக்கையை சுட்டிக்காட்டியுள்ள ஜகத்டயஸ், இந்த கடும்சவாலை எதிர்கொள்வதில் அரசாங்கத்திற்கும் ஜனாதிபதி வேட்பாளர்களிற்கும் உள்ள பொறுப்பை வலியுறுத்தியுள்ளார்.

யுத்தகுற்றங்களில் ஈடுபட்டவர்கள் என தான் குற்றம்சாட்டியவர்களை விசாரணைகளிற்கு உட்படுத்தி தண்டிப்பதற்கு இலங்கை தவறிவிட்டதாக குற்றம்சாட்டும் ஜெனீவா, வெளிப்புற உலகளாவிய நியாயாதிக்கத்தை பயன்படுத்துதல், நம்பகதன்மை மிக்க விதத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்களிற்கு எதிராக பொருளாதார தடைகள் பயணத்தடைகளை விதித்தல்,சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் பிற நடவடிக்கைகள் போன்ற தந்திரோபாயங்களை சர்வதேச சமூகம் பின்பற்றவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது என ஜகத்டயஸ் தெரிவித்துள்ளார்.

(05)

# புத்தளத்தில் 345 கிலோ பீடி இலை பொதிகள் மீட்பு



புத்தளம், எரெம்புகோடெல்ல மற்றும் கப்பலடி ஆகிய கடற்கரை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 345 கிலோ கிராம் நிறையுடைய பீடி இலை பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடல் வழியாக இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காகக் கடற்படையினரால் மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இந்த பீடி இலை பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதன்படி, புத்தளம், எரெம்புகோடெல்ல கடற்கரை பகுதிகளிலிருந்து 169 கிலோ கிராம் நிறையுடைய 04 பீடி இலை பொதிகளும் கப்பலடி கடற்கரை பகுதிகளிலிருந்து 176 கிலோ கிராம் நிறையுடைய 05 பீடி இலை பொதிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.கைப்பற்றப்பட்ட பீடி இலை பொதிகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன என கடற்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

(05)

# கடலில் அடித்துச் செல்லப்பட்ட 3 சிறுவர்கள் கல்கிசையில் மீட்பு

கல்கிசை கடலில் நீராடிக் கொண்டிருந்த மூன்று சிறுவர்கள் திடீரென நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ள நிலையில் கல்கிசை பொலிஸ் உயிர்காப்பு பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

கொழும்பு 09 பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுடைய மூன்று சிறுவர்களே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இந்த சிறுவர்கள் மூவரும் ஞாயிற்றுக்கிழமை கல்கிசை கடலுக்கு நீராடச் சென்றுள்ள நிலையில் திடீரென நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதன்போது, அங்கு கடமையில் இருந்த கல்கிசை பொலிஸ் உயிர்காப்பு பிரிவினர் இந்த சிறுவர்களை காப்பாற்றி கரைக்கு கொண்டு வந்து அவர்களுக்கு முதலுதவி அளித்து களுபோவில வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.(05)

# மூன்று இலங்கையர் இந்தியாவில் கைது

## தங்கம் கடத்தல் குற்றச்சாட்டின் கீழ்

தங்க கடத்தல் மோசடியில் ஈடுபட்ட மூன்று இலங்கை பிரஜைகள் இந்தியாவில் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இந்தியாவில் பெங்களூரு நகரிலுள்ள கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரும் கொழும்பில் இருந்து கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையத்திற்கு சென்ற நிலையில் சுங்க அதிகாரிகளால் தடுத்துநிறுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது, ஆசனவாயிலில் தூள் போன்ற பொருள்களுடன் தங்கம் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை சுங்க அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் மொத்த எடை 1,670.92 கிராம் ஆகும். இதன் மொத்த இலங்கை மதிப்பு 42,528,927 ரூபா (11,900,000 இந்திய மதிப்பு) ஆகும்.(05)

# சட்டவிரோத மதுபானத்துடன் ஒருவர் பமுனுகமவில் கைது

பமுனுகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சூட்டிவத்த பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேக நபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என பமுனுகம பொலிஸார் தெரிவித்தனர்.

பமுனுகமபொலிஸாருக்குக்கிடைத்ததகவலின்பேரில்மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உஸ்வெட்டகெய்யாவ பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார். சந்தேக நபரிடமிருந்து 101 லீற்றர் 250 மில்லி லீற்றர் சட்டவிரோத மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பமுனுகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




காலைக்கதிர் Kalaikkathir

# முற்போக்கு தமிழ் தேசிய கட்சி தேர்தலில் சஜித்துக்கு ஆதரவு




ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசாவுக்கு தமது ஆதரவை வழங்கியுள்ளதாக முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் சுதர்சிங் விஜயகாந்த் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில -

கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போதும் நாம் சஜித் பிரேமதாஸவையே ஆதரித்திருந்தோம். அன்று தொடக்கம் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் முற்போக்கு தமிழ் தேசிய கட்சியும் இணைந்து பயணிக்கிறது.

உழைக்கும் பாட்டாளி மக்களுக்கு அரசியல் அதிகாரங்கள் வேண்டும் என்பதே எமது பிரதான கோரிக்கையாக நாம் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிடம் முன்வைத்துள்ளோம்.

பாட்டாளி மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்படவேண்டும், அவர்களின்பிள்ளைகளின்கல்வி மேம்படுத்தப்பட வேண்டும். இவற்றுக்கு எல்லாம் எம்மிடம் அரசியல் அதிகாரங்கள் காணப்பட்டாலே அவற்றை நாம் மேம்படுத்த முடியும். அதனால் பாட்டாளி மக்களுக்கு அரசியல் அதிகாரங்கள் தேவை என பிரதானமாக கோரியுள்ளோம்.

எமது கோரிக்கைகளை சஜித் பிரேமதாஸ ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் எமது ஆதரவை நாம் அவருக்கு வெளிப்படையாக தெரிவித்துள்ளோம்.

இதேவேளை இலங்கை தமிழரசுக் கட்சியும் , சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளார்கள். அதனை நாம் வரவேற்கிறோம். - என்றார்.(05)

# மனைவியைத் தாக்கி கொன்ற கணவருக்கு தூக்குத் தண்டனை

தனது மனைவியை இரும்புக் கம்பியால் தாக்கிக் கொலை செய்ததாகக் கூறப்படும் கணவருக்கு மரண தண்டனைவிதித்து ஊவாமாகாணமேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

35 வயதுடைய மனைவியே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது-

பதுளை,கெந்தகொல்லபிரதேசத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் திகதி தனது மனைவியை இரும்பு கம்பி யால் தாக்கி கொலை செய்த கணவருக்கு எதிராக பதுளை பொலிஸாரால் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குடும்ப தகராறு காரணமாக இந்தக் கொலைச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளன. சந்தேக நபரான கணவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சாட்சிகள் நிரூபிக்கப்பட்டதையடுத்து ஊவா மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி பிரசன்ன அல்விஸ்ஸால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.(05)

# ஹெரோயின் போதைப்பொருளுடன் கல்கிசையில் மூவர் கைதாகினர்

கல்கிசை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரத்மலானை பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் மூன்று சந்தேக நபர்கள் நேற்று (திங்கட்கிழமை) கல்கிசை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிசை பொலிஸ் குற்றப் புலனாய்வுபிரிவினரால்மேற்கொள்ளப்பட்ட 03சுற்றிவளைப்புகளின்போதேசந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 22, 38 மற்றும் 55 வயதுடைய இரத்மலானை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் ஆவர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவரிடம் இருந்து 10 கிராம் 700 மில்லிகிராம் ஹெரோயினும் மற்றய இருவரிடமும் இருந்து 05 கிராம் 100 மில்லிகிராம் மற்றும் 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, சந்தேக நபர்கள் மூவரும் மேலதிக விசாரணைகளுக்காக கல்கிசை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாராணைகளை கல்கிசை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# பிரபல வர்த்தகரின் மகளின் வீட்டில் கொழும்பில் திருட்டு

## சந்தேகநபர் கைது

கொழும்பு, கறுவாத்தோட்டம் பிரதேசத்தில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவரின் மகளின் வீட்டிற்குள் நுழைந்து பெறுமதியான பொருள்களை திருடியதாகக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் கொழும்பு தெற்கு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 52 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கடந்த ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி கறுவாத்தோட்டம் பிரதேசத்தில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவரின் மகளின் வீட்டிற்குள் நுழைந்து 03 லட்சம் ரூபா பெறுமதியான 06 தங்க வளையல்கள், 02 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் இரத்தினக்கற்கள் பொருத்தப்பட்ட மாலை ஒன்று ஆகிய பொருள்களைத் திருடிச் சென்றுள்ளார்.

பின்னர், இந்த வீட்டின் உரிமையாளரான பிரபல வர்த்தகரின் மகள் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இந்தத்திருட்டுச்சம்பவம்குறித்தவீட்டிலிருந்தகண்காணிப்பு கமெராவில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.09.2024இல் வெளியிடப்பெற்றது